9. அறிவிப்பு

தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2005). மாண்புமிகு நிதியமைச்சர்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2005)[@] ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஹேமச்சந்திரன்.*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவுக்கு அடிப்படையாக இருக்கிற அறிவிப்பு இங்கே வந்த நேரத்தில் இதுசம்பந்தமாக மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் சில கருத்துகளை இங்கே எடுத்து வைத்தார்கள். இன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புவது இந்தச் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கோ அல்லது அரசு ஊழியர்களுக்கோ, மற்றுமுள்ளவர்களுக்கோ ஊதிய உயர்வு*

@ 13-4-2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2005 ஏப்ரல் 13

கொடுப்பது என்ற பொறுப்பு அல்லது அதற்கான உரிமை அரசுக்கு இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்தச் சட்டப் பேரவையிலே இருக்கின்ற எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல நேரடியாக அல்லாமல் மற்ற முறையிலேகூட ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், இன்று இந்த அரசின் கீழே பணியாற்றிக் கொண்டிருக்கிற அரசு ஊழியர்கள், அதேபோன்று பல்வேறு துறைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஊழியர்கள், நான்கூட இந்த அவையிலே சொன்னேன், அரசு இரப்பர் கழகத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிற தொழிலாளிகளுக்கு 13 மாத காலம், 35 மாத காலம், 13 ரூபாய் வைத்து அவர்கள் உண்மையிலேயே உழைத்து அரசுக்கு இலாபத்தை ஏற்படுத்திக் கொடுத்ததற்குப் பிறகும் அவர்களுக்கு அந்தக் குடிசிகை கொடுக்கப்படவில்லை. இப்படி எல்லாம் இருக்கிற நேரத்திலே, அதற்கும் மேலே 10,000–க்கும் அதிகமான சாலைப் பணியாளர்கள் இன்றைக்கு . . .

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. திரு. ஹேமச்சந்திரன், இந்தச் சட்டமுன்வடிவின் மேலே உங்கள் கருத்தை ஏதாவது சொல்லுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: ஆமாம். Time கொடுங்கள். சட்டமுன்வடிவிற்குள்ள விஷயம்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உலகத்திலே இருப்பவற்றை எல்லாம் கொண்டு வந்து பேசினீர்கள் என்றால் பேச முடியாது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: இல்லை, இல்லை. அது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறுபடியும் அவற்றையெல்லாம் பேச முடியாது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: இல்லை, இல்லை, நான் ஒரு minute–லே பேச்சை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இல்லை. நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவின்மீது பேசுவதாக இருந்தால் பேசுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: சட்டமுன்வடிவின்மீதுதான் பேசுகிறேன்.

2005 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன், அதிலே சுருக்கமாக உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: இப்படிப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு, இன்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்திருந்தால், மக்கள் அதை ஒரு நல்ல taste–லே எடுத்திருப்பார்கள். ஆனால், இன்று வெளியே மக்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள்? இப்படிப்பட்ட ஏராளமான மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் அவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொண்டு போகிறார்கள். ஆகவே, இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எனக்கு இருக்கிற வேண்டுகோள் அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இருக்கிற வேண்டுகோள், இப்படிப்பட்ட உழைப்பாளி மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்கு அவர்களுக்கும் ஊதிய உயர்வு கொடுப்பதற்கு, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படாமல், அரசு இரப்பர் தோட்டத் தொழிலாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய குடிசிகை போன்ற விஷயங்கள், நம்முடைய போக்குவரத்துத் துறை தொழிலாளிகள், மின்சாரத் துறை தொழிலாளிகள், இவர்களுக்கு எல்லாம் ஊதிய உயர்வு (மணியடிக்கப்பெற்றது) ஊதிய உயர்வுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன், இவை இந்தச் சட்டமுன்வடிவில் கிடையாது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: ஊதிய உயர்வு அவர்களுக்கும் கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கருத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2005 ஏப்ரல் 13

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 8/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2005 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2005). மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 5/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த பன்னிரண்டாவது நிதிக் குழு, நிதி வழங்கு கால அளவிற்கான கடன் நிவாரணத் திட்டத்தின் பயனைப் பெறும்பொருட்டு 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தினை திருத்துவதெனக் கருதப்பட்டுள்ளது என்று நோக்க, காரண விளக்க உரையை இந்தச் சட்டமுன்வடிவிலே கொடுத்திருக்கிறார்கள்.

@ 12-4-2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது